# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.8

2006, மே 31, புதன்கிழமை

வைகாசி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு – 2037

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

" தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு. "

(காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.)

1. தகவல் கோரல்

1. சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.05.2006 அன்று மாலைமலர் பத்திரிகைக்கு அளித்த பேட்டி குறித்து திரு சி. ஞானசேகரன் அவர்கள் விளக்கம் கோரினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இப்பிரச்சனை குறித்து விளக்கம் ஒன்றை பேரவைக்கு அளித்தார்.

2. திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் கடந்த கால அரசு மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியினை முழுமையாக செலவழிக்கவில்லை எனவும் இது குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விளக்கம் ஒன்றைப் பேரவைக்கு அளித்தார்.

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( அறிமுகம் செய்தல் )

(1) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுச் ) சட்டமுன்வடிவு

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

..2

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(2) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் ( ஆய்வு செய்தல் )

(1) 2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டமுன்வடிவு
( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.11/2006)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :–

1. முனைவர் கே. ஜெயக்குமார்
2. திருமதி ரா. லீமாறோஸ்
3. திரு கி. ஆறுமுகம்
4. திருமதி பி. பத்மாவதி
5. திரு சி. ஞானசேகரன்
6. மாண்புமிகு முனைவர் க. பொன்முடி

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் இச்சட்டமுன்வடிவு குறித்து விளக்கம் அளித்தார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(2) 2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.12/2006)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

4) அரசினர் தீர்மானம்

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, மற்றும் 132 ஆகியவற்றை தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடிகளுக்கு ( தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுச் ) சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.14/2006) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

...4

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5) அரசினர் சட்டமுன்வடிவுகள் ( ஆய்வு செய்தல் )

(1) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல்

பழங்குடிகளுக்கு (தனியார் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுச் ) சட்டமுன்வடிவு

( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2006 )

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் திருத்தத்தை முன்மொழிந்தார்:–

" In the said Bill, in Sub-Clause (d) of Clause (2) the words " by the Government " occuring in two places be deleted."

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது. பிரிவுகள் 3 முதல் 11 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி நிறைவேற்றப்பட்டு, ஏற்கப்பட்டது.

2) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டமுன்வடிவு ( சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.14/2006)

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :—

1. திரு விடியல் எஸ். சேகர்
2. திரு ஜி.கே. மணி
3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
4. திரு எஸ். இராஜசேகரன்
5. திரு எச். வசந்தகுமார்
6. திரு ப. டில்லிபாபு

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்தார்.

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டுமென்று கோரினார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6) அரசினர் தனித் தீர்மானம்

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கீழ்க்காணும் திருத்தப்பட்ட தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார்:—

" மண்டல் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு மைய அரசின் கீழுள்ள குடிமுறைப் பதவிகள் மற்றும் பணிகளில் உள்ள 27% காலியிடங்கள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று மைய அரசு 1990 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது. மண்டல் குழு கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டினை பரிந்துரை செய்த போதிலும் மேற்குறிப்பிட்ட இடஒதுக்கீட்டினை மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கல்வி நிலையங்களுக்கான சேர்க்கைக்கு நீட்டிக்கவில்லை. அரசின் உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்க அரசுக்கு வழிவகை செய்யும் அரசியலமைப்பு சட்டம் 93வது திருத்தம் கொண்டு வந்ததன் விளைவாக ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம். உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு வழங்க மைய அரசு தற்போது உத்தேசித்துள்ளது. இந்த ஒதுக்கீடு அவர்களது முன்னேற்றத்தினை உறுதி செய்யும் என்பதாலும், அவர்களை சமுதாயத்தில் உள்ள

மற்றவர்களோடு சமநிலைக்கு கொண்டு வரும் என்பதாலும் மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதி உதவி வழங்கப்படும் அனைத்து கல்வி நிலையங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீட்டினை வழங்க தொடர்ந்து செயலாற்றுமாறு இந்த அவை மைய அரசை கேட்டுக்கொள்கிறது. இந்த ஒதுக்கீட்டினை செயல்படுத்த ஒரு அவசர சட்டத்தினைக் கொண்டுவருமாறும் இந்த அவை ஆலோசனை வழங்குகிறது. மேலும், பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான சமூக நீதி வழங்கும் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகப் போராடும் மாணவர்கள் குறித்து உச்சநீதிமன்றம் எச்சரித்த பிறகும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மன்மோகன் சிங் அவர்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்த பிறகும், சில ஆதிக்க சக்திகளின் தூண்டுதலினால் மாணவர்கள் தொடரும் போராட்டத்தைக் கைவிட்டு, அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இந்த அவை கேட்டுக்கொள்கிறது. "

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டனர்:—

1. திரு வை. சிவபுண்ணியம்
2. திரு என். நன்மாறன்
3. திரு ஜி.கே. மணி
4. திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ்

இத்தீர்மானம் மற்றும் இன்று நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்தும் நிறைவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவரும் தன் சார்பில் இத்தீர்மானத்தை வரவேற்பதாகக் கூறி, இத்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

7) பாராட்டுரை

சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் 32 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு நிலைகளில் பணியாற்றி பேரவை தொடர்புடைய அலுவல்கள் சரிவர நிறைவேற்றப்பட மிகுந்த ஈடுபாட்டுடன் ஒத்துழைப்பு நல்கிய திரு ஜி. அனீஸ் அஹமத், கூடுதல் செயலாளர் இன்று ( 31.05.2006 ) பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் அவருக்கு தமது பாராட்டுதல்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

8) பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25(1)இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை நிகழ்ச்சிகள் நண்பகல் 12.34 மணிக்கு முடிவுற்று பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

மா. செல்வராஜ்,
செயலாளர்.